IN THE COURT OF THE ADDITIONAL DISTRICT JUDGE DHARMAPURI

O.S. No. 174 of 2022

Deposition of D.W. 1

Name of the Witness: திரு.தனபால்

Date : 09.09.2024

**குறுக்கு விசாரணை**

என்னுடைய பூர்வீகம் நடுப்பட்டி கிராமம் என்றால் சரிதான். என் அப்பா மாணிக்கம் இறந்து 40 வருடங்கள் இருக்கும் என்றால் சரிதான். என் அப்பா இறக்கும் போது எனக்கு 10 வயதிருக்கும். என் அம்மா முத்து 2021ல் இறந்தார் என்றால் சரிதான். எனக்கு பெரியம்மாள் அக்கா, அண்ணன்கள் பெரியண்ணன், மணி, வாதி, 2 பிரதிவாதி ராஜா என்னுடன் உடன் பிறந்தவர்கள். என் அப்பா உயிருடன் இருக்கும் போதே எனது அக்கா பெரியம்மாள், எனது அண்ணன் பெரியண்ணன், மணிக்கு திருமணம் ஆகி விட்டது. பெரியண்ணனுக்கு 45 வருடத்திற்கு முன்பாகவே திருமணமாகி விட்டது என்றால் சரிதான். என் அண்ணன் மணிக்கு பெரியண்ணனுக்கு திருமணமாகி அதே வருடத்தில் திருமணமாகி விட்டது.

(தொடர் குறுக்கு விசாரணைக்காக ஒத்தி வைக்கப்படுகிறது)